1973 மார்ச் 7]

வடஆர்காடு மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத்தூர் ஆகிய தாலுக்காக்கள், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் குட்டை பச்சை வாழை பயிர் செய்யப்படுகிறது.

(இ) மாநில அரசின் கீழ் அந்த மாவட்டங்களில் குட்டை வாழை உற்பத்தியை அதிகரிக்க ஒரு தீவிர வாழை சாகுபடி திட்டம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. மத்திய அரசு திட்டங்களின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான பச்சை வாழை சாகுபடி செய்ய ஒரு திட்டம் செயல்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY : In the answer given by the Hon. Minister he has said that Robusta (pachai vazhai) is being introduced. At Hosur, this variety is coming up nicely. I have planted Robusta banana and it has come up nicely in my garden. So, may I know whether the Hon. Minister would extend the Central scheme to Dharmapuri district also.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்களே அதைச் செய்வது குறித்து நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அந்தத் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் தான் மத்திய அரசின் சார்பில் அமல்நடத்தப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்தை விரிவு படுத்துவதற்குத் தற்சமயம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : குட்டை வாழையின் ஒரு பழத்தை ரூ. 2 கொடுத்து வாங்குவதற்கு ரஷ்ய நாட்டிலும், பாரிஸ் நகரத்திலும் கிராக்கி இருக்கிறதாக சொல்லப்படுகிறதே ? ஆகவே, இதை ஏற்றுமதி செய்கின்ற அளவில் மேலும் பல இடங்களில் பயிரிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்பொழுது மத்திய அரசின் உதவியோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹெக்டார், 2,500 ஏக்கர் இப்பொழுது பயிர்செய்யப்பட்டு வருகிறது. இந்த வாழைக்கு மேலும் ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருக்குமானால் அதைப் பற்றிப் பரிசிலனை செய்யப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : கோவை மாவட்டத்தில் இந்தப் பச்சைவாழை பயிரிடுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் இந்தப் பச்சை வாழையை அதிகம் விரும்புவதில்லை. ஆகவே, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு அங்கே உற்பத்தி ஆகும் வாழையை விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா ?